மாநிலத்திற்குப் பேருந்துகளை விட வேண்டுமென்றால் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, அனுமதி பெற்ற பிறகுதான் விட முடியும். எனவே, வாளையார் வரை பேருந்து விடுவதிலே எந்தவித ஆட்சேபனையும் இல்லை. வாளையார் வரை பேருந்துவிட ஆய்வு செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**4—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

***65251—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு தொகுதி, பாரதப்பள்ளியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மத்திய அரசின் இலக்கின்படி இரண்டு சுகாதார மையங்களுக்கிடையே இடைவெளி குறைந்தபட்சம் 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், பாரதப்பள்ளி கிராமத்திற்கும் திருவட்டாறு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 4 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு ஊராட்சி ஒன்றியம், பாரதப்பள்ளி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், அவையில் இல்லை. மாற்றாக மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய துணை சுகாதார நிலையம் கட்டுவதற்கு எவ்வளவு தூரம் இடைவெளி வேண்டும்? இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இடையில் இடைவெளி 8 கிலோ மீட்டர் இருக்க வேண்டும். அதுபோல், கிளை துணை சுகாதார நிலையம் அமைக்க

2011 பிப்ரவரி 5]

வேண்டுமென்றால் எவ்வளவு இடைவெளி இருக்க வேண்டும்? மக்கள் தொகை தற்போது அதிகமாகப் பெருகி இருக்கிறது. பெருகி இருக்கிற அந்தப் பகுதிகளுக்குப் புதிய துணை சுகாதார நிலையங்களைத் துவங்குவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா, இந்த அரசு மத்திய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்புமா என்று கேட்க விரும்புகிறேன்.

காங்கேயம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்கள் எட்டு. ஆனால் இன்றைக்கு பணியில் 3 பேர் மட்டும்தான் இருக்கிறார்கள். புதிய மருத்துவர்களை எப்பொழுது நியமிப்பீர்கள் என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க வேண்டுமென்றால், 30,000 மக்கள் தொகை கொண்ட பகுதியாக அது இருக்க வேண்டும். எட்டு கிலோ மீட்டர் தூர இடைவெளியில் வேறு எந்த மருத்துவமனைகளும் இருக்கக்கூடாது. அத்தகைய விதிமுறைகளுக்குட்பட்டு இருந்தால், புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் துவக்குவதற்கு வாய்ப்புகள் உண்டு.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் அவர்கள், அவருடைய பகுதியிலுள்ள மருத்துவமனையில் மருத்துவர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றனவென்ற ஒரு கருத்தைக் கூறியுள்ளார்கள். நேற்றும், நேற்று முன்தினமும் நடந்ததுபோல இதற்கு முன்னர் 34 கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, கிட்டத்தட்ட 6,978 மருத்துவர்களை நியமனம் செய்திருக்கின்றோம். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தத் துறையை ஆய்வு செய்யும்பொழுது மருத்துவமனைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று அளித்த உத்தரவிற்கிணங்க இப்போது படிப்படியாக நாங்கள் கலந்தாய்வுக் கூட்டங்களை நடத்தி, நேர்காணல் செய்து, பணியிடங்களைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கின்றோம். 3–2–2011 மற்றும் 4–2–2011 ஆகிய இரண்டு நாட்கள் 35–வது சிறப்புக் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தி, இந்த இரண்டு நாட்களில்

[2011 பிப்ரவரி 5

கிட்டத்தட்ட 430 மருத்துவர்களைப் பணியமர்த்தி இருக்கின்றோம் என்ற செய்தியை நான் மகிழ்ச்சியோடு தெரிவிகின்றேன். இன்னும் சொல்லப்போனால் மருத்துவமனைகளில் இருந்த காலிப் பணியிடங்கள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கூ.ந. சேகரன்.

**திரு. கூ.ந. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான திருவெறும்பூரில் உள்ள பத்தாளப்பேட்டை, கிருஷ்ணசமுத்திரம், கூத்தப்பர் போன்ற மூன்று பேரூராட்சிகள் உள்ளடக்கிய பகுதிகளிலே, கூத்தப்பர் என்ற பகுதியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று கடந்த நான்கு வருடங்களாக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்தும், இந்த ஆண்டிலும் அதை அறிவிக்கவில்லை. அதைத் தொடங்குவதற்கு இந்த ஆண்டாவது அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

திருவெறும்பூரில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமெனக் கேட்டிருந்தேன். ஏனென்றால் திருவெறும்பூர் புதிய வட்டத் தலைநகராக அறிவிக்கப்பட்ட காரணத்தினால் வட்டத்தின் தலைநகரத்திலே இருக்கின்ற அந்த ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கலைஞர் அவர்கள் 5–வது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இந்த நான்கரையாண்டுக் காலத்தில் கிட்டத்தட்ட 166 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, இந்த நான்கரையாண்டுக் காலத்தில் கிட்டத்தட்ட 297 மருத்துவமனைகள், 30 படுக்கைகள் வசதி கொண்டவையாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இப்போது மாண்புமிகு உறுப்பினர்

2011 பிப்ரவரி 5]

அவர்கள், தன்னுடைய தொகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையமும், 30 படுக்கை வசதி கொண்ட தரம் உயர்த்தப்பட்ட புதிய மருத்துவமனையும் வேண்டுமென்ற கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவை வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி, அவையில் இல்லை.

வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**6—**

**திருத்தேர்**

***92103—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் அருள்மிகு நாறும் பூ நாதர் திருக்கோயிலுக்குப் புதிய திருத்தேர் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ராதாபுரம் வட்டம், பழவூர் அருள்மிகு நாறும் பூ நாதர் திருக்கோயில் தேர்த் திருப்பணிக்குத் திருக்கோயிலில் போதிய நிதி வசதியில்லாத காரணத்தால் தற்போது புதிய தேர் செய்ய வழிவகையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16 ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னரான மார்த்தாண்ட மன்னரால் கட்டப்பட்ட மிகப் பழமையான வரலாற்றுச் சிறப்புமிக்க